பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 12 ஞாயிற்றுக்கிழமை (25-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 148

# லலித் கொலையை அடுத்து கொழும்பில் பதற்ற நிலை!

## இந்திய பத்திரிகைகளில் முக்கிய இடம்

புதுடில்லி, ஏப். 25

இந்திய பத்திரிகைகள் பலவற்றின் தலைப்புச் செய்தியாக, ஸ்ரீலங்காவின் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்தியாவின் வானொலி,

(2 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபைத் தேர்தலை அரசு ஒத்திவைக்கக் கூடும்

கொழும்பு, ஏப்ரல் 25

முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான லலித் அத்துலத் முதலி நேற்று முன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து, கொழும்பில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டன.

இத்தகைய பதற்றகரமான சூழ்நிலையைக் காரணம் காட்டி மே நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தல்களை அரசு ஒத்திவைக்கக்கூடும் என்றும் கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அச்சம் வெளியிட்டனர்.

*கொழும்பில் பதற்றம் நிலவுவதை அடுத்து இராணுவத்தினர் வீதிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். வீதி ரோந்துகளிலும் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.*

## துப்பாக்கி நபர் மேடையில் ஏறி லலித்தை சுட்டுத் தள்ளினார்

கொழும்பு, ஏப். 25

நேற்றுமுன்தினம் இரவு கிருலப்பனையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலி உரையாற்றிக் கொண்டிருந்தார்.

அச்சமயம் திடீரென துப்பாக்கி மனிதர் ஒருவர் இன்னொருவர் சகிதம் கூட்ட மேடையில் தோன்றினார் என்றும்—

தம்மிடம் இருந்த தானியங்கித் துப்பாக்கி ஒன்றினால அந்த நபர் அத்துலத் முதலி மீது

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கொலையாளி தமிழ் இளைஞர்?

கொழும்பு, ஏப். 25

லலித்தை கொலை செய்ததாக நம்பப்படும் தமிழ் இளைஞர் ஒருவரின் சடலத்தை கிருலப்பனை பொலீஸார் நேற்று நண்பகலுக்கு சற்று முன்னர் கண்டுபிடித்து மீட்டுள்ளதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது

ஊர்வாசிகள் தந்த தகவல் ஒன்றை அடுத்து — லலித்தின் பிரசாரக் கூட்டம் நடந்த இடத்துக்கு — 100 யாருக்கு அப்பால் — கிருலப்பனை முகலன் மாவத்தையில் — கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் — அந்த இளைஞனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த இளைஞனின் கையில் செக்கஸ்சிலவேக்கியா தயாரிப்பான 9 மி. மீ கைத் துப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அரசே லலித் கொலைக்கு காரணம் என்கிறார் காமினி

கொழும்பு, ஏப். 25

அரசாங்கத்துடன் நெருக்கமுடைய பரா இராணுவத் துருப்புகளே — அரசின் தூண்டுதலின் பேரில் — லலித் அத்துலத் முதலியைச் சுட்டுக் கொன்றன.

— இவ்வாறு அரசின் மீது குற்றம் சுமத்தியிருக்கிறார் லலித் கட்சியின் சிரேஷ்ட உதவித் தலைவர் காமினி திஸநாயக்கா.

1984 இற்கும் 1989 இற்கும் இடைப்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக லலித் அத்துலத் முதலி செயற்பட்டார் என்பது உண்மைதான். ஆனால் அவரை விடுதலைப் புலிகளே கொன்றனர் என்பதை நான் நிராகரிக்கிறேன்.

எது எப்படியிருப்பினும் அரசின் ஆதரவுடனேயே விடுதலைப் புலிகள் கொழும்பில் இயங்குகின்றனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா அதிர்ச்சி! துயரம்!!

கொழும்பு, ஏப். 25

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்துத் தாம் அதிர்ச்சியும் துயரமும் அடைந்துள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்திருக்கிறார்

கோழைத்தனமான — கொடூரமான செயலை நியாயசிந்தனை படைத்த அனைவரும் பலமாகக் கண்டிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துலத் முதலி கொலை செய்யப்பட்ட சூழ்நிலை பற்றி விசாரணை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும்படி தாம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருக்கிறார்.

இந்த நெருக்கடி காலத்தில் ஜனநாயகச் சக்திகள் அனைத்தும் கைகோத்து செயல்பட இதுவே உரிய தருணம் என்றும் —

கொலைகாரர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த தமது அரசாங்கம் தனது ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ-எ-க-5-6)

## துப்புத் தருவோருக்கு ரூ.50 லட்சம்

கொழும்பு, ஏப். 25

லலித் அத்துலத் முதலியின் கொலையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட நபரை அல்லது நபர்களை கைது செய்வதற்கு உதவும் தகவல்களைத் தெரிவிப்பவர்களுக்கு 50 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புலன்விசாரணைகளுக்கு பொதுமக்களின் உதவியையும், ஒத்துழைப்பையும் பொலீஸ் மா அதிபர் கோரியிருக்கிறார் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-6)

## ஸ்கொட். பொலீஸார் விசாரணை நடத்துவர்

கொழும்பு, ஏப்ரல் 25

லலித்தின் கொலை குறித்து விசாரணை செய்வதற்கு ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸாரின் உதவியை நாடும்படி ஜனாதிபதி பிரேமதாசா பாதுகாப்பு அமைச்சரைப் பணித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த யோசனையை பொலீஸ் மா அதிபர் வரவேற்றுள்ளார்.

இதற்கிடையில்—

ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸைச் சேர்ந்த நான்கு துப்பறியும் நிபுணர்கள் நாளை திங்கட்கிழமை கொழும்பு வருகின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க அறிவித்துள்ளார். (ஒ-க-6)

## தலைமைத்துவப் போட்டியில் லலித்திடம் தோற்றவர் காமினி திஸாநாயக்கா

### ஐ. தே. க. செயலர் அறிக்கை

கொழும்பு, ஏப்ரல் 25

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைத்துவத்திற்காக அண்மையில் நடந்த போட்டியில் தாம் லலித் அத்துலத் முதலியிடம் தோற்றவர் என்பதை மறந்து விட்டது போல் காட்டுவதற்கு காமினி திஸநாயக்கா முயற்சிக்கக் கூடாது

அதே போல, தமது சொந்தக் கட்சியே தனது கணவரைக் கொலை செய்தது என்பதை திருமதி பண்டாரநாயக்கா மறந்து விடக்கூடாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிமா ஆஸ்பத்திரி விரைவு

கொழும்பு, ஏப்ரல் 25

துப்பாக்கிச் சூட்டுச் காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு லலித் அத்துலத் முதலியை எடுத்துச் சென்றிருந்த போது—

சம்பவத்தை கேள்வியுற்ற எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டார நாயக்கா அங்கு அவசரமாக விரைந்து சென்றிருந்தார்.

எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தினர்.

ஆஸ்பத்திரிக்கு முன்னால் திரளான மக்களும் கூடியிருந்தனர். அதேசமயம் லலித்தின் இல்லத்துக்கு முன்னாலும் பெருவாரியான மக்கள் திரண்டிருந்தனர். (ஒ-6)

## மட்டு. நவிண்டிலியமடுவில் இரு வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஏப். 25

மட்டக்களப்பு நவிண்டிலியமடு என்ற இடத்தில் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை கடந்ததிங்கட்கிழமை மாலை 5 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினர் சுற்றிவளைத்தனர்.

அச்சமயம் விடுதலைப் புலிகள் போராளிகள் படையினர் மீது தாக்குதலை நடத்தினர். இருதரப்பினருக்கும் இடையில் கடும் சண்டை இடம் பெற்றது.

இந்த மோதலில் படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தரப்பில் இருவர் வீரச்சாவு அடைந்தனர். வீரவேங்கை கௌரவன் (கனகசபை பவளசிங்கம் — கொக்கட்டிச்சோலை), வீரவேங்கை கலைவாறன் (குமாரதாஸ் விஜயதாஸ் — குருக்கள் மடம்) ஆகியோர் வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர்.

இதேவேளை—

மட்டக்களப்பு சந்திவெளிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய விமானக்கடத்தல்; அதிரடிப்படை முறியடிப்பு

புதுடில்லி, ஏப். 25

141 பயணிகளுடன் புதுடில்லியில் இருந்து ஸ்ரீநகர் நோக்கிப் பறந்துகொண்டிருந்த இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் ஒன்று கடத்தப்பட்டு அமிர்தசரஸில் உள்ள ராஜா சாந்தி விமான நிலையத்தில் கட்டாயமாகத் தரையிறக்கப் பட்டது.

நேற்று பின்னிரவில் இந்திய கொமாண்டோப் படைகள் விமானத்திற்குள் திடீரென நுழைந்து தாக்குதல் நடத்தி விமானக் கடத்தல்காரனை சுட்டுக்கொன்றன. பயணிகள் விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 1-40 மணிக்கு டில்லியை விட்டுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

### செல்வி இராதிகா இராஜதுரை

எமது புதல்வி செல்வி இராதிகாவின் பூப்புனித நீராட்டு விழா நிகழ்வு நாளை திங்கட்கிழமை (26 - 04 - 1993) காலை 8-30 மணி முதல் 10-30 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் எமது அச்சுவேலி இல்லத்தில் மங்களகரமாக நடைபெற திருவருள் கூடியுள்ளது.

இந்த வைபவத்தில் கலந்து கொண்டு செல்வி இராதிகாவை வாழ்த்தி, ஆசீர்வதிக்கும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு க. இராஜதுரை
(அதிபர், நடேஸ்வரா கல்லூரி)
திருமதி த. இராஜதுரை

" இராமானந்தா "
அச்சுவேலி வடக்கு.
(25397)

---

## அரியாலை சனசமூக நிலைய 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு

## வடமாகாண ரீதியிலான சுற்றுப் போட்டிகள்

★ எறிபந்தாட்டம் - 6 பேர். 6 ஓவர்கள்.
★ உதைபந்தாட்டம் - லீக்கில் பதிவு செய்யப்படாத குழுக்கள் 7 பேர் உள்ளடங்கியது
★ கரப்பந்தாட்டம் - ஓவர்சேம்
★ வலைப்பந்தாட்டம் -

போட்டிகள் யாவும் "நொக் அவுட்" முறையில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவு: 28-04 93
கட்டணம்: ரூபா 25/-
தொடர்பு: அரியாலை சனசமூக நிலையம், புங்கன்குளம், அரியாலை, யாழ்.
(25393)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### பத்தலோமேயு யோசப் அன்ரன்

தோற்றம்: 11 - 01 - 1918 உதிர்வு: 27 - 03 - 1993

இளவாலை பத்தாவத்தையை பிறப்பிடமாகக் கொண்ட பத்தலோமேயு யோசப் அன்ரன் 27-3-1993 அன்று இளவாலையில் காலமானார்.

இவர் கரம்பனைச் சேர்ந்த கிளமன்ற் புஸ்பம் அவர்களின் அன்புக் கணவரும், ஏஞ்சல் விமலா, மரியதாஸ், அருட் சகோதரி டெலறோஸ், யேசுதாஸ், சிசிலியா, சிறில்லா, அமலசீலி, தேவதாஸ், நற்கருணைதாஸ் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அவரது ஆன்ம சாந்திக்காக எதிர்வரும் 27-4-93 செவ்வாய்க்கிழமை மாலை 5·30 மணிக்கு தாளையடி. புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்
அவர் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
துயரில் பங்கெடுக்கும்
கார்மேல் அருட் சகோதரிகள், பங்குத்தந்தை, பங்குமக்கள்

கார்மேல் அலையகம்,
தாளையடி.
(25389)

---

## மரண அறிவித்தல்

### ஜெருசலை சிங்கராயர்

இளவாலை சென்ஜேம்சை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது உரும்பராயில் வசித்தவருமான ஜெருசலை சிங்கராயர் 24-04-93 இல் காலமாகி விட்டார்.

இவர் மார்த்தம்மாவின் அன்புக் கணவரும், பாக்கியம், அருளப்பு, காலஞ்சென்றவர்களான சைமன், (ராஜேந்திரம்) சிசிலியா அன்னம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரரும், லூயிஸ்மலர், ஜோசவ் (மாலை தீவு), ஜேம்ஸ்தாஸ் றெபேக்கா. ஞானரட்னம் (இத்தாலி), எட்வின் (சுவிஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜோண் ஆஞ்சலோ (சவுதி), ராஜேஸ்வரி, றோசலீன், அரசரட்ணம், ராஜரட்ணம் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிஸ்ரா (இத்தாலி), கிறிஸ்ரீன், மதியழகன், கலா, ரவீந்திரன், பமிலா. யஸ்மின், ரஞ்சன் கென்சி, தர்ஷிகா, மெஸ்மன். ஜெனோ, ஜெறின்ஜெனற்றுவீனா, பபியோ (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (25-04 93 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் உரும்பராய் சென். மைக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லூயிஸ்மலர் (மகள்)

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.
(25399)

---

# யாழ்ப்பாணத்துக்கு மேலாக ஒரு மர்மப் பொருள்...?

யாழ்ப்பாணத்துக்கு மேலாக மர்மப் பொருள் ஒன்று பறந்து கொண்டிருக்கிறதா?

இவ்வாறு ஒரு சந்தேகத்தை எழுப்பி இருக்கிறார் நீர்ப்பாசனப் பகுதியைச் சேர்ந்த திரு. கே. யோகராசா.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 03 மணி தொடக்கம் 11.45 மணி வரை தாம் மர்மம் பொருள் ஒன்றை பார்த்து அதன் அசைவுகளை பாகைக் கணக்குச் சாதனம் ஒன்றில் பதிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

வெள்ளிக்கிழமை இரவு 8.03 மணிக்கு, செயற்கைக்கோள் போன்ற ஒரு பொருள் சீரற்ற பாதையில் அங்கும் இங்கும் அலைவது போல அசைந்தது.

அது அடிக்கடி திடீர் திடீரென்று மிக இலகுவாக முறித்து முறித்து திசைமாறித் திரும்புவதையும் அவதானிக்க முடிந்தது. அந்த மர்மப் பொருள் செல்லும் பாதையைப் பாகைக் கணக்கோடு பார்த்தபோது அது தெற்கு நோக்கி 45 பாகைகளுக்குச் சென்று 11 45 மணிக்கு மங்கிய நட்சத்திரம் போல விட்டு விட்டுப் பிரகாசித்த வண்ணம் மறைந்துவிட்டது —என்றார்.

அந்த மர்மப்பொருள் விமானமாக இருக்காது; வான் நட்சத்திரமாக இருக்கக் காரணம் இல்லை; பறக்கும் தட்டாக இருக்கக்கூடுமென்றும் அவர் தனது ஊகத்தைத் தெரிவித்தார். (அ)

### மட்டு. நவிண்டி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் கடந்த புதன்கிழமை காலை 9 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவரும், புலிகளின் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

வீரவேங்கை ராயு நாகலிங்கம் பாஸ்கரன் - சந்திவெளி]. ஆதரவாளரான சுரேஷ் என்றழைக்கப்படும் சந்திவெளியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுரேந்திரன் ஆகிய இருவருமே வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர். [ஒ]

### இந்திய பத்திரிகை..

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொலைக்காட்சி போன்றனவும் லலித்தின் கொலைச் சம்பவத்தக்கு முன்னுரிமை கொடுத்து செய்திகளை வெளியிட்டன. (ஓ-எ)

### சமகால..

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வது தவிர்க்கப்படல் வேண்டும்.

★ 24 அடி நீளம் - 11 அடி அகலம் - 12 அடி உயரம் கொண்டதாக ஊர்திகள் அமைய வேண்டும்.

★ பேரணியின்போது ஊர்திகளைப் பார்வையிட்டு தரம் வாய்ந்த பத்து ஊர்திகளுக்குப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

— இவ்வாறு அரசியல் துறைப் பொறுப்பாளர் அறிவித்திருக்கிறார். (இ)

### லலித்திடம் தோற்றவர்...

('1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன கூரே லலித் அத்துலத் முதலி கொலையுண்டமை தொடர்பாக அவர் நேற்று கொழும்பில் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இப்படிச் சுட்டிக்காட்டினார். அவர் அதில் மேலும் குறிப்பிட்டதாவது:-

எதிர்க் கட்சியினர் சம்பவங்களை அரசியல் லாபத்திற்காக சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் வழமையான தந்திரோபாயத்தில் ஈடுபட்டிருப்பது வெளிப்படையாகியுள்ளது

இந்தக் கொலையில் அரசாங்கத்திற்குப் பங்கிருப்பதாக திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவும், திரு. காமினி திஸநாயக்காவும் குற்றம் சாட்டியுள்ளனர். இவர்களின் கூற்று தவறானதும் ஆதாரமற்றதுமாகும.

தேர்தலைப் பின் போடுவதற்கு ஒரு சாட்டைக் கூற அரசு எத்தனிக்கிறது என்ற திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் கூற்று ஆதாரமற்றதாகும்.

அரசாங்கத்தின் ஆதரவோடு கொழும்பில் விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்படுகிறது என்ற காமினிதிஸநாயக்காவின் கூற்று முட்டாள் தனமானதாகும். அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக சண்டை இட்டு வருகிறது என்பதை உலகம் அறியும்.

---

## உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் முன்னர் அறிவிக்கப்பட்ட 25 - 04 - 1993 இன்று நடைபெறமாட்டாது என்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அதற்கான திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

நன்றி.

செயலாளர்:
ஸ்கந்தா ஐ. வி கழகம்,
சுன்னாகம்

(சி-2006)

---

## அறிவித்தல்

### யாழ். மாவட்டச் சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரினதும் கவனத்திற்கு

எதிர்வரும் மே தினப் பேரணி ஏற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல் பின்வரும் கால நேர அட்டவணைப்படி நடைபெறவிருப்பதனால், யாழ். மாவட்டத்தி உள்ள பின்வரும் மன்றங்களின் சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரும் தத்தம் பகுதியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

| கலந்துரையாடல் நடைபெறும் காலமும் நேரமும் | கலந்துரையாடல் இடம்பெறும் இடம் | கலந்துரையாடலில் கலந்து கொள்ள வேண்டியவர்கள். |
|---|---|---|
| 01. 93-04-26 காலை 10 மணி | கணேசா வித்தியாசாலை சித்தன்கேணிச் சந்தி. | வலி மேற்குப் பிரதேச சபையின் ஊழியர்களும் இப்பிரதேச சபை எல்லைக்குள் 'சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு) இயங்கும் சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரும். |
| 02. 93-04-26 காலை 10 மணி. | உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை. | வலி. தெற்கு. வலி. வடக்குப் பிரதேச சபைகளின் ஊழியர்களும் இப்பிரதேச சபைகளின் எல்லைக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும். |
| 03. 93-04-26 பிற்பகல் 02 மணி | அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி. | வலி. கிழக்கு பிரதேச சபையின் ஊழியர்களும் வலி. கிழக்குப் (கோப்பாய் உ. அ. அதிபர் பிரிவு) பிரதேச சபையின் எல்லைக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும். |
| 04 93-04-26 பிற்பகல் 02 மணி | நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | பருத்தித்துறைப் பிரதேச சபை, பருத்தித்துறை நகர சபை, வல்வெட்டித்துறை நகர சபை, வடமராட்சி தென்று மேற்குப் பிரதேச சபை ஆகியவற்றின் ஊழியர்களும் இந்தச் சபைகளின் எல்லைகளுக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும். |
| 05. 93 04-26 பிற்பகல் 02 மணி | சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி. | சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேசசபை ஆகியவற்றின் ஊழியர்கள், இம்மன்றங்களின் எல்லைகளுக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் ஆகியோர் அனைவரும் |

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
விராட் விஸ்வப் பிரம்மணே நம:

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு

## கதிர்காமர் ஆசைப்பிள்ளை

அன்னை மடியில்: 20 - 03 - 1914
ஆண்டவன் திருவடியில்: 06 - 05 - 1992

சதுர்த்தி திதி: 25 - 04 - 1993

வான்பூத்த தெய்வசித்தன், மனம்பூத்த தர்மஞானி
தேன்பூத்த ஆசைப்பிள்ளைத் திருநாமம் படைத்த செல்வன்
ஊன்பூத்த தேகத்துள்ளே ஒளிபூத்த சோதிகண்டான்
ஆன்பூத்த சிவனடிக்கீழ் அமர்ந்தானை அஞ்சலித்தோம்

மனைவிநன் மக்கள் பேரர் மருமக்கள் சுற்றமெல்லாம்
நினைவினில் அன்பாய்க்கண்டு, நீள்தவத் தான்மா காணும்
கனவென வாழ்வுநாளைக் கருதினான் தேவனானான்
மனமொழி வாக்கால் அந்த மகாத்மாவை வணங்குகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"திருமகள் வாசம்",
நிகரை வீதி, சங்கானை.

(25349)

# நூற்றாண்டு இறுதியில் உலக சனத்தொகை 620 கோடி

ஜெனிவா, ஏப். 25

உலக சனத்தொகை இந்த நூற்றாண்டின் முடிவில் 620 கோடியாக அதிகரிக்கும் என்று ஐ.நா தகவல் நிலையம் அறிவித்திருக்கிறது.

2025 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகை 650 கோடியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் (1992) உலக சனத்தொகை 550கோடியாக இருந்தது ஆண்டு தோறும் சனத்தொகை 1.7 சதவீதத்தினால் அதிகரித்து வருகின்றது 1992 இல் உலக சனத்தொகை 9 கோடி 30 லட்சம் மக்களால் அதிகரித்தது.

இப்படி ஐ. நா. தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

(இ-எ)

# உணவு முத்திரை தொடர்-8 மே மாதத்தில் விநியோகம்

வலி-மேற்கு, ஏப். 25

எட்டாவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகளை மே மாத நடுப்பகுதியில் இருந்து விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ் செயலகத்தின் சமூகசேவைப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

ஏழாவது தொடர் உணவு முத்திரைகள் உள்ளவர்களுக்கே மேற்படி நிவாரண உணவு முத்திரைகள் வழங்கப்படும்.

அண்மையில் கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்ட இந்த வறுமை நிவாரண முத்திரைகளை பிரதேச செயலகங்களுக்கு வழங்கி மே மாத நடுப்பகுதிக்கு முன்னர் பொது மக்களுக்கு கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(த-175)

## பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப், 25

கோப்பாய் வடக்கு கோல்ட் ஸ்றார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற இருந்த பாடுமீன் - றோயல் அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

(த)

## 2 கோடி கடன்

கொழும்பு, ஏப். 2

இலங்கை வான் பிராந்தியத்தை பயன்படுத்தியதற்கா அமெரிக்க ஆயுதப்படைகள் இலங்கை விமானப்போக்குவரத்து நிறுவனத்துக்கு ஒரு கோடி 95 லட்சம் ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

# 50 பிரசாரக் கூட்டங்களில் பிரேமா கலந்து கொள்வார்

கொழும்பு, ஏப். 25

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸா 50 பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளவிருக்கிறார்.

அவர் கலந்து கொள்ளும் முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்று கண்டியில் நடைபெறுவதாக இருந்தது [த-எ]


# INFOSHARE

123, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

மைக்கிறோ கொம்பியூற்றர் வாயிலாக, நவீன முறையில் தகவல்களைச் சேகரித்து வைத்தல், தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல், தகவல் பற்றிய கல்வி ஆகியவற்றை நம்மவர்க்கு அறிமுகம் செய்யும் ஒரே ஒரு நிறுவனம்.

| சேவைகள் | தொடக்கம் |
|---|---|
| A — சோதிடம் | |
| 1. இலங்கையிலோ, உலகில் வேறெப் பகுதியிலோ பிறக்கும் குழந்தைகளின் சாதகங்களைக் கணித்தல், (வாக்கிய முறைப் படியும், கிருஷ்ண மூர்த்தியின் முறைப் படியும்) | — 26 04-93 |
| 2. விவாகப் பொருத்தம் பார்த்தல் | — 26-04-93 |
| 3. 21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வாழ்க்கைத் துணைக்கு வேண்டிய தகவல்களை சேகரித்து வைத்து வேண்டுபவர்களுக்கு வழங்குதல் | — 02 05 93 |
| B — கல்வித்துறை | |
| 1 Information Technology Management | — 02-05 93 |
| 2. 14 — 17 வயதுள்ள பிள்ளைகளுக்கு கொம்பியூற்றரை உபயோகித்தல் பற்றிய வகுப்புகள் | — 02-05-93 |
| 3. உத்தியோகம் பார்ப்பவருக்கு கொம்பியூற்றரைப் பயன்படுத்தல் பற்றிய விரிவுரைகள் | — 08-05 93 |
| 4. சோதிடம் - சிக்கலான இப் பொருள் பற்றி முதலில் இருந்து கற்பித்து, சாதகம் கணிக்கும் வகையையும், வருங்காலத்தை அறிவதற்கான முறையையும் தெளிவாக விளக்கும் விரிவுரைகள் | — 08 05 93 |
| 5. Spoken English 14 - 17 Years | — 02-05 93 |
| 6. Spoken English Over 18 Years | — 02-05 93 |

கல்வித்துறையில் சேர விரும்புவோர் வகுப்புகள் தொடங்குவதற்கு முதல் நாளுக்கு முன்னரே நேரில் விண்ணப்பிக்க வேண்டும்.

(மேலதிக விவரங்களுக்கு நிறுவனத்தில் தொடர்பு கொள்ளவும்)

(6133)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அடை வைப்பதற்கு உகந்த ஜப்பனீஸ் பன்ரம், யாமாஸ் x பன்ரம், வெள்ளடி கோழி முட்டைகளும் பன்ரம், வெள்ளடி குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கதிர் தேனீர்ச்சாலை, துறைமுகச் சந்தி, கொழும்புத்துறை [25374]

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. வயது 50 நாட்கள். பூச்சி அகற்றப்பட்டவை. வரதன் சைக்கிள் கடை, அரசடி சந்தி, நவாலி தெற்கு [25373]

எக்கனோ பவர் 90 நல்ல நிலையில் புத்தகத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு இல. 80, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை, தபாற் கந்தோர் அருகில், யாழ்ப்பாணம். [25377]

அழகான பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A. F. றோசான், சி. குகனேந்திரன் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (6135)

## சீயாக்காய் பவுடர்

மீண்டும் மலிவு விலையில் விற்பனையாகிறது பேன். சொடுகு, அழுக்கு இல்லாமல் செய்யும் காவேரி சீயாக்காய் பவுடர் கண் குளிர்மைக்கு, கூந்தல் வளர்ச்சிக்கு பாவியுங்கள் தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர். (25333)

## O/L MATHS

G.C.E. O/L இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் இருபத்தாறு வருட அனுபவமுடைய ஆசிரியரினால நாற்பது மணித்தியாலங்களில் [Distinction] பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (25381)

## முத்தாமணக்கம் விதை

முத்தாமணக்கு பணம் பெருக்கும் சிறந்த எண்ணெய்ப்பயிர். உச்சப் பயன் தரும் வர்க்க விதை பக்கற் ஒன்று ரூ.5/-. ''மில்க்வைற்'' [சி-5041]

## தாதிகள் தேவை

வைத்தியசாலைக்கு பெண் தாதிகள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் சான்றிதழ்களுடன் காலையில் சமுகமளிக்கவும். மெடிக்கல் சென்ரர், நவாலி தெற்கு, மானிப்பாய் (6129)

## ஆசிரியர் தேவை

G.C.E. O.L படிக்கும் மாணவனுக்கு வீட்டில் கற்பிக்கத் தகுதியுள்ள ஆசிரியர் தேவை. தொடர்பு: வே. நடராஜா, சட்டத்தரணி, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (6125)

## தேவை

இடம்பெயர்ந்த குடும்பத்திற்கு ஏழாலை தெற்கு, விழிசிட்டி, மயிலங்காடு ஆகிய இடங்களுக்கு அருகாமையிலும் (சுன்னாகத்திற்கு அண்மித்ததாக) அமைந்த விவசாயக் காணி தேவை. பரப்பு ரூபா நாற்பதிற்குள் இருத்தல் வேண்டும். தொடர்பு: இல. 10, மே/பா உதயன் சேவை நிலையம், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5895)

வெற்று ஜாம் போத்தல்கள் நியாயமான விலைக்கு கொள்வனவுசெய்யப்படும். வேலவன் ஸ்ரோர்ஸ், (நல்லூர் கோவில் முன்பாக) பருத்தித்துறை வீதி, நல்லூர். (25337)

## மணமக்கள் தேவை

வடமராட்சி, இந்து. 40 வயது பூரம் 2, பாவம் 13, செவ்வாய் 4 பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு மணமகன் தேவை. வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். 38 வயது, பரணி 4, பாவம் 20, செவ்வாய் 12, கணக்காளர் சகோதரனுடன் மாற்றுச் சம்பந்தமும் செய்யலாம். குறிப்பும் முழு விவரங்களும் அனுப்பவும். இல. 900, மே/பா உதயன். (6123)

## மணமகன் தேவை

பண்பாடான குடும்பத்தைச் சேர்ந்த 24 வயதுடைய, இலங்கை வங்கியில் கடமை புரியும் அழகிய, படித்த மணமகளுக்கு படித்த, தரமான மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும். G குணரட்ணம், இல. 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம். [25383]

## மணப்பெண்கள் தேவை

22 வயது, விசாகம், பாவம் 20/29, தனியார் துறையில் பணி புரிபவருக்கும், 30 வயது, அனுசம், பாவம் 20/22 நேர்வே மணமகனுக்கும் மணப்பெண்கள் தேவை. 'வரோதயன்' திருவீதி, உரும்பராய் (25385)

## வாடகைக்குத் தேவை

மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு வசதியுடைய வீடு யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் ஒதுக்குப்புறமான சுற்றாடலில் தேவை நல்ல வாடகை எதிர்பார்க்கலாம். சகலதும் உத்தரவாதமளிக்கப்படும். மு. ஹரன், இல. 322, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (25369)

## வீடு தேவை

உரும்பராய், உடுவில், சுன்னாகம், இணுவில் ஆகிய பகுதியில் வீடு விலைக்குத் தேவை 'வரோதயன்' திரு வீதி, உரும்பராய் வடக்கு. (25386)

## தவறிவிட்டது

கலையரசி, கலைமதி செல்லத்துரை 1ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி ஆகியோரின் ஜி. சி. ஈ. சா/தர பரீட்சைப் பெறுபேறுகள், 23-04 93இல் இராசாவின் தோட்ட வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ச. செல்லத்துரை, இல. 383/1'A', நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (மெதடிஸ்த மிஷன் பாடசாலை அருகில்) ஒப்படைக்கவும். (25382)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் ஏப். 25

அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள மனறக் கலாமண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் வீணை இசை, இசைக் கச்சேரி, நாதஸ்வரக் கச்சேரி ஆகியன இடம்பெறும்.

யாழ் ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு குணசப் பிள்ளை சிறில் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு பொ. பாலசிங்கம், யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள். (க)

## 42ஆவது நினைவு தின அழைப்பு



### அமரர் இராசா சிவப்பிரகாசம்

[B. Sc. (Lond.) Dip - in Edu (Cey.)]

தோற்றம்: 07-06-1930 மறைவு: 15-03-1993

ஆஸ்திரேலியாவில் காலஞ்சென்ற சித்தன்கேணி திரு. இராசா சிவப்பிரகாசம் (B Sc) அவர்களின் நினைவாக அன்னாரது இல்லத்தில் இன்று (25 - 04 - 1993) முற்பகல் 11 மணி தொடக்கம் கூட்டுவழிபாடு சபிண்டீகரணம், மதிய உணவு என்பன நடைபெறும்.

அவ்வமயம் உறவினர், நண்பர், பெரியோர்களைப் பங்குபற்றுமாறு மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்

தங்கள் நல்வரவை நாடும்:
மனைவி மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

''பூம்புகார்'',
சித்தன்கேணி. (25366)

# சோனியாவை எம்.பியாக நியமிக்க பிரதமர் ராவ் முடிவு

புதுடில்லி, ஏப் 25

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியை ராஜ்ய சபை எம். பியாக நியமிக்க பிரதமர் நரசிம்மராவ் முடிவு செய்திருப்பதாக, புதுடில்லிப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

சோனியா காந்தி அரசியலில் பிரவேசிக்கும் வாய்ப்பு தென்படுவதாகவும் இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (த-எ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 05 — 1921

மறைவு: 26 — 03 — 1993

திருமதி

### சுப்பிரமணியம் பூரணம்

எங்கள் அன்பின் குடும்பவிளக்காய், பாசத்தின் ஒளியாய், இதயத்தின் தெய்வமாய் திகழ்ந்து 26 - 03 - 1993 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர் பூரணம் சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்திபடைய இதயம் நெகிழ்ந்து இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்:
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

158/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (25384)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 05 — 1944

மறைவு: 26 — 03 — 1993

திருமதி

### இலட்சுமணன் அன்னலட்சுமி

''உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்கா தென்பார்கள் ஆனால் இந்த பாச உள்ளம் உறங்கி விட்டது''.

எங்கள் அன்புத் தெய்வமே! பண்பின் உறைவிடமாய், பாசத்தின் குலவிளக்காய், இல்லத்தில் வாழ்க்கைத் துணைவியாய், கண்ணை இமைகாப்பதுபோல் காத்துவந்த அன்னையே! காலனவன் பொறுக்காமல் பாதியிலே கழுத்தில் களம் போட்டு விட்டான்!

அம்மா எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு, மீளாத்துயில் கொண்டு விட்டீர்களே! ஒரு மாதம் அல்ல, ஒரு யுகம் ஆனாலும், உங்கள் அன்பான உள்ளமும், உருவமும், நினைவும் எங்கள் அனைவரின் மனக்கண்ணை விட்டு நீங்காது!

''உன் நினைவால் அழியாத
தூபி ஒன்று நாட்டிடுவோம்''

அன்னாரின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியம் வவுனியா குடியிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் இன்று [25 - 04 - 93] நடைபெறும்.

உங்கள் பிரிவால் தவிக்கும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

N. இராசரெத்தினம்
மரக்காலை லேன்,
பலாலி றோட், திருநெல்வேலி (25375)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சனநாயகத்தின் பயங்கரவாதம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும் முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சருமான லலித் அத்துலத் முதலி சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்.

அடுத்த மாதம் 17ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலில் மொத்தம் உள்ள பதினேழு மாவட்டங்களில் பத்துக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் ஆளும் கட்சிக்கும் லலித் அத்துலத் முதலியின் ஐ ஐ தே முன்னணிக்கும் இடையிலேயே கடும் போட்டி நிலவுகிறது. குறிப்பாக தலைநகர் கொழும்பு அடங்கும். கொழும்பு மாவட்டத்தில் லலித் கட்சிக்கே வெற்றி கிடைக்கும் என்ற சாதக நிலை இருந்தது.

இத்தகைய சூழ்நிலையில், சமான்யர் எவரும் லலித் அத்துலத் முதலியின் கொலைக்கு ஐக்கிய தேசியக் கட்சிமீதே விரலைச் சுட்டுவார். லலித கட்சியின் வேட்பாளர் ஒருவர் கடத்தப்பட்டது, அவரது வலது கை என்று கருதப்படும் முன்னாள் அமைச்சர் பிரேமச்சந்திரா கைதுசெய்யப்பட்டது ஆகிய மாகாணசபைத் தேர்தலை ஒட்டிய முன்னோடி நிகழ்வுகள் ஆளுங்கட்சியின் கையே இரத்தக்கறை படிந்தது என்பதற்கு பக்கச் சான்றுகளாக அமைகின்றன.

மேலும் ஜே. ஆர். அரசாங்க காலத்திலிருந்தே ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் லலித் அத்துலத் முதலிக்கும் இடையில் நிலவிய பதவிப் போட்டி முதற்கொண்டு —

லலித்தையும் காமினியையும் கட்சியின் பின் கொல்லைக்கு தள்ளியது; அதனால் அவர்களுக்கு இடையே ஏற்பட்ட பகைமை; ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்ட உச்சக்கட்டம்; அவர்கள் இருவரும் ஆளுங்கட்சியிலிருந்து நீக்கப்பட்டமை; இருவரும் புதிய கட்சி ஒன்றை உருவாக்கி ஐ தே கட்சியின் செல்வாக்கை உடைக்க வல்ல எதிரணியாக உருவானமை வரையான —

அம்சங்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் லலித்தின் கொலைக்கு ஆளுங்கட்சியும், ஜனாதிபதியுமே சூத்திரதாரிகள் என்ற சந்தேகமே எவர் மனதிலும் எழும் அக்கட்சியின் கூலிப்படைகளோ அல்லது மரணப் பட்டாளமோ இந்த அரசியல் கொலையைச் செய்திருக்கலாம் அல்லவா?

எப்படியோ தெற்கில் சனநாயகப் போர்வையில் பயங்கரவாதம் தலையைக் காட்டியிருக்கிறது.

தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையை அரச பயங்கரவாதம் மூலம் தீவிரப்படுத்தியதில், அதற்கு அத்திவாரமிட்டதில் சிறிமா, ஜே ஆர். போன்றவர்களுடன் லலித்துக்கும் சமபங்கு உண்டு. அவர் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்தபோது மூர்க்கத்தனமாகக் கட்டவிழ்த்துவிட்ட அரச பயங்கரவாதத்தையும் இரத்த வெறியையும் தமிழர்கள் என்றைக்கும் மறக்கமாட்டார்கள். விடுதலை வேட்கையும், இலட்சியப் பற்றும் கொண்ட தமிழர்களை ஆயுத பலத்தால் வெல்லமுடியாமல் தோல்விகண்ட முதல் நபரும் அத்துலத்தே!

அறத்தை மறந்து அதிகாரத்தனத்தின் மூலமும், ஆயுத பலம் மூலமும் தமிழர்களை அடிமை கொள்ள நினைப்பவர்கள் எல்லோருக்கும் இதே கதி தான் கிடைக்கும்.

பிரேமதாசாவுக்குப் பக்கபலமாக நின்று இடையில் வந்து துள்ளிக் குதித்த ரஞ்சன் விஜேரத்தினாவுக்கு என்ன நடந்தது? தமிழர்களின் அறம் பொலிந்த யுத்தத்துக்கு எதிராக அவரால் வெற்றி காண முடிந்ததா? அவரைத் தமிழர் படை கொன்றது. லலித்தை அவர் உருவாக்கிய அரச பயங்கரவாதமே பலி எடுத்து விட்டது! இதே வழிநாடும் சகல சிங்களத் தலைவர்களும் தர்மத்திடம் இருந்து தப்பிவிட முடியாது என்பதையே லலித்தின் மரணம் சுட்டி நிற்கிறது! எச்சரித்திருக்கிறது!

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் டொனால்ட் கணேஷ்குமார் ஞாபகார்த்தமாக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தொடரில் இன்று சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் அணி மோதும். இந்த ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். (உ)

o o o

யாழ் நகர் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ். ஆஸ்பத்திரி அடைக்கல மாதா தேவாலயத்துக்கு முன்னால் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர்களில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

கிரிக்கெட்

★ காலை 8-30 மணி:- ஜபாலய அணி எதிர் ஐபனார் வி க. அணி

★ பிற்பகல் 2 30 மணி:- கலைமகள் வி க. அணி எதிர் ரத்தினாஸ் வி க அணி

கரப்பந்தாட்டம்

★ பிற்பகல் 3 மணி: பாரதி ''ஏ'' அணி எதிர் சென். அன்ரனீஸ் ''பி'' அணி

★ அரியாலை அணி எதிர் சென்ற் அன்ரனீஸ் ''ஏ'' அணி

## ஆலயங்களில்

கைதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (க-117)

o o o

இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (க-152)

o o o

உடுவில் மீனாட்சி சுந்தரேசர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மே மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க-152)

o o o

அராலி தெற்கு ஆகாய குளப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். (க-152)

o o o

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (க-117)

o o o

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோவில் வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது மே மாதம் ஐந்தாம் திகதி புதன்கிழமை காலை இரதோற்சவமும் மாலை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-152)

o o o

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தில் 9ஆம் திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை கம்பவாரிதி இ. ஜெயராஜ் சிறப்புரையாற்றுவார். (த-3)

o o o

மயிலணி, ஏப் 25

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ நாட்களை முன்னிட்டு நாளை திங்கள் முதல் 10 நாட்களுக்கு தினமும், அபிஷேகமும், விசேட பூசை வழிபாடும் இடம்பெறும். (இ-89)

## ஷெல் தாக்கு

அராலி, ஏப். 25

பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கி ஸ்ரீலங்காப் படையினர் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ஷெல் மற்றும் துப்பாக்கித் தாக்குதல்களை நடத்தினர். (உ-12-28)

# சமகாலநிகழ்வுகளே இம்முறை மேதின ஊர்திகளில் சித்திரிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 25

இவ்வருட மேதின பேரணியில் இடம்பெறும் ஊர்திகள் சமகால நிகழ்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்று மேதின ஏற்பாட்டுக் குழு அறிவுறுத்தி உள்ளது.

பேரணியில் பங்கு கொள்ளும் ஊர்திகளின் அமைப்பு பின்வரும் சித்திரிப்புகளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

1. தமிழீழ போராட்ட வரலாற்றின் முக்கிய கட்டங்கள்.

2. பேரினவாதக் கொடூரத்தின் மத்தியிலும் உழைக்கும் மக்களது ஆற்றலினால் பொருளாதாரத் தடை தோல்வியுறுதல்.

3. உழைப்பின் பயனாக அரசியல், சமூக பொருண்மிய மேம்பாட்டுக்கான அடிக்கட்டுமானப் பணிகள் செயற்படுத்தப்படல்.

4. ஸ்ரீலங்கா அரசின் இனவெறியால் ஏற்படும் அவலங்கள்

(அ) கிளாலிப் படுகொலைகள்

(ஆ) கடற்றொழிலாளர் படும் இன்னல்கள்

(இ) இன்னல்களுக்கு மத்தியிலும் கல்வியில் சாதனைகள்

(ஈ) தென் தமிழீழத்தில் இராணுவ அட்டூழியங்கள்

(உ) பெண் விடுதலை

★ ஊர்திகளை அமைத்தவர்களின் பெயர், மற்றும் விவரங்கள் ஊர்திகளில் முன்னும் பின்னும் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும். சாரதி, உதவியாளர், மற்றும் ஊர்தி சித்திரிப்பு பாத்திரங்களைத் தவிர ஏனையோர் ஊர்தியில்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாஸாவுக்கு அரசியலில் சவால் விடக்கூடியவர் லலித்

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அரசியலில் சவால் விடுக்கக் கூடியவர்கள் இரண்டே இரண்டு பேர். ஒருவர் எதிர்க் கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மற்றவர் லலித் அத்துலத் முதலி.

— இவ்வாறு பி பி. ஸி தனது விமர்சனத்தில் குறிப்பிட்டது

செல்வாக்கும் பணபலமும் மிக்க நிலப்பிரபுக்கள் பரம்பரையில் வந்த அத்துலத் முதலி 1989 ஆம் ஆண்டு பிரதமர் பிரேமதாஸா தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் வரை சிங்கள ஆட்சி பீடத்தின் உள்வீட்டுப் பிள்ளையாகக் கருதப்பட்டவர்

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திலும், அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக் கழகத்திலும் படித்துப் பட்டம் பெற்ற ஓர் வழக்கறிஞர். இலங்கையிலும் இந்தியா, இஸ்ரேல் உட்பட பல வெளிநாடுகளிலும் சட்டத்துறை விரிவுரையாளராக பணியாற்றினார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் அரசில் தேசிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த போது வடக்கே தமிழ்ப் போராளிகள் மீதும் தெற்கே ஜே.வி. பி யினர் மீதும் போர் நடக்தினார். அதனால் பலரால் பெரிதும் வெறுக்கப்பட்ட ஓர் அரசியலவாதியாகத் திகழ்ந்தார்.

தேர்தல் பிரசாரத் தந்திரங்களில் ஜனாதிபதி பிரேமதாஸவிற்கு ஈடுகொடுக்கக் கூடிய ஒரேயொருவர் என்று கருதப்பட்டவர்

1936 நவம்பர் 26 ஆம் திகதி பிறந்த லலித் அத்துலத் முதலி, 1973 இல் ஐ. தே. கவில் இணைந்தார்

1977 இல் இரத்மலானைத் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட அவர் ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையில் வர்த்தக கப்பல் துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

1984 இல் தேசிய பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர், 1987 இல் அவரின் உத்தரவுப்படி ஸ்ரீலங்கா இராணுவம் வடமராட்சியில் ''ஒப்பரேஷன் லிபரேஷன்'' நடவடிக்கையில் ஈடுபட்டது

1989 இல் பிரேமதாஸா, அரசில் விவசாய அமைச்சராக நியமிக்கப்பட்ட அவர் 1990 இல் கல்வி உயர்கல்வி அமைச்சரானார்.

1991 இல் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்றுக்குக் கொண்டுவர முன்னின்று செயற்பட்டார். அதனையடுத்து ஐ தே. கவில் இருந்து வெளியேறறப்பட்ட அவர் புதிய கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைத் தோற்றுவித்தார்.

(உ ஒ 5-6)

# அமைச்சரை நோக்கி கல்லெறி

நேற்று முன்தினம் இரவு லலித் அத்துலத் முதலி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த சமயம்—

அங்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்தனர்

அவ்வேளை சுற்றாடல், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விமல விக்கிரமசிங்கவும், லலித்தைப் பார்வையிட பெரியாஸ்பத்திரிக்குச் சென்றிருந்தார் என்றும்—

அப்போது அமைச்சரை நோக்கி அங்கு சோகமே உருவாகக் கூடியிருந்த மக்கள் கல்லெறிந்து கோஷமிட்டனர். என்றும் - ஏஜென்சிச் செய்திகள் தகவல் வெளியிட்டன (ஒ-6)

## அரசே லலித்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு பதற்றத்தை — அச்சத்தை — ஏற்படுத்தும் அரசின் தொடர் நடவடிக்கைகளின் ஓர் அங்கமே இது. அரசே இக்கொலைக்கு முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும்.

கடந்த மூன்று வாரங்களாக லலித் அத்துலத் முதலி மேற்கொண்ட தேர்தல் பிரசாரத்தினால் ஐ. தே. கவுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டதும் முக்கியமான ஒரு காரணமாகும்.

சாதாரண தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பொலீஸார் காணப்படுவது வழக்கம். ஆனால் லலித் சுடப்பட்ட கிருலப்பனை கூட்டத்தில் ஒரு பொலீஸார் கூடக் காணப்படவில்லை.

— இவ்வாறு காமினி திஸநாயக்கா குறிப்பிட்டார்.

லலித் கொலைக்கு அரசுதான் காரணம் என்பதற்கு தங்களிடம் ஆதாரம் ஏதும் உண்டா என்று அவரிடம் கேட்டபோது —

''ஆதாரம் என்று நேரடியாகக் குறிப்பிடுவதற்கு ஒன்றும் இல்லை ஆனால் கடந்த சில காலங்களாக எமது கட்சிக்கும், கட்சித் தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்டு வந்த தொடர் அராஜகம், வன்செயல்கள் என்பன நல்ல சாட்சியங்கள்

''இத்தகைய செயல்களில் ஈடுபட்ட குழுக்களையோ பொலீஸாரையோ தடுத்து நிறுத்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்'' — என அவர் பதிலளித்தார்.

(ஒ 6)

## கொலையாளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கி ஒன்றும், அதற்குரிய குண்டுகள் நிரப்பப்பட்ட இரு மகஸின்களும் மற்றும் கைக்குண்டுகளும் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டு பிடிக்கப்பட்ட அந்த இளைஞனின் அடையாள அட்டையில் இருந்து அவர் மானிப்பாய், கொக்குவில் தெற்கைச் சேர்ந்த அப்பையா பாலகிருஷ்ணன் (20 வயது) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்

இந்நபர் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனவும் லலித்தைச் சுட்டவர் இந்நபர்தான் என நம்பலாம் எனவும் கிருலப்பனை பொலீஸ் பொறுப்பதிகாரி கூறியுள்ளார்

நேற்று முன்தினம் கொலைச் சம்பவம் நடந்த சமயம் அத்துலத் முதலியின் மெய்ப்பாதுகாப்பாளரின் துப்பாக்கிச் சூட்டினால் மேற்படி இளைஞர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

இதற்கிடையில்—

விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் லலித் முக்கிய இலக்காக இருந்தார் என்று 'லங்காபுவத்' தெரிவித்துள்ளது

(ஒ-6)

## துப்பாக்கி நபர் மேடையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும் —

பின்னர் கொலைகாரனும், கூட வந்த நபரும் கார் ஒன்றில் ஏறித் தப்பி விட்டனர் என்றும் இந்திய வானொலி நேற்று அறிவித்தது

இதற்கிடையில்—

கிருலப்பனைச் சம்பவத்தில் படுகாயமடைந்த லலித் அத்துலத் முதலிக்கு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் இரவு டாக்டர்கள் சத்திர சிகிச்சையை மேற்கொண்டனர்.

எனினும் லலித்தின் உயிர் சரியாக இரவு 11-05 மணிக்கு பிரிந்தது.

இறுதிச் சடங்குகள் எதிர்வரும் புதன்கிழமை கனத்தை பொது மயானத்தில் நடைபெறும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சி. க. வேலாயுதபிள்ளை

(ஸ்தாபகர், அகில இலங்கை காந்திசேவா சங்கம்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சர்வோதய இயக்கத்தின் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளரும் ஆகிய திரு சி. கந்தையா வேலாயுதபிள்ளை அவர்கள் 11-04-93 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், அன்னலட்சுமி, காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசரத்தினத்தின் மைத்துனரும், மகேந்திரம் (சுவிஸ்), பரமலிங்கம் காலஞ்சென்ற தெய்வேந்திரம் (இ. போ. ச. கணக்காய்வாளர்), குலேந்திரம் (சுவிஸ்), ஞானாம்பிகை, கமலாம்பிகை (சுவிஸ்), பாலாம்பிகை, பஞ்சலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-04-93 அன்று கொழும்பில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இ. பரமலிங்கம்.
(மருமகன்)

சாந்தன்,
நீர்வேலி.
(25380)

## யோசேப் சிங்கராசா

முல்லைத் தீவு அளம்பிலைச் சேர்ந்த யோசேப் சிங்கராசா அளம்பிலில் 21-04-93 இல் காலமானார்.

அன்னார் றோசம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி (ஆசிரியை, அளம்பில் கனிஷ்ட வித்தியாலயம்), ஞானப்பிரகாசம், பாக்கியநாதன் (சுவிஸ்), மரியரீற்றா (ஆசிரியை, அளம்பில் கனிஷ்ட வித்தியாலயம்), லோறன்ஸ் (தாதி உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை, கொண்செப்ரா (கிழக்குப் பல்கலைக் கழகம்), கொண்சலாற்றா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மிக்கேல்பிள்ளை, மேரி அற்புதம், நகுலேல்வரி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் அளம்பிலில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இன்று 25-04-93 காலை 6-15 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலை மரியன்னை ஆலயத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இரங்கல் ஆராதனை இடம் பெறும்.

இச் செய்தியறிந்து துக்கத்தில் எம்முடன் பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

தகவல்:
சி. அ. லோறன்ஸ் [தாசன்]
(மகன்)

134, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(25388)

## நல்லையா அற்புதராஜா [அற்புதன்]

(மோட்டார் சைக்கிள் மெக்கானிக்)

நல்லையா அற்புதராஜா 24-04-93 அன்று அகால மரணமானார்.

அன்னார் நல்லையா (இ.போ.ச யாழ். சாலை சாரதி), ந திலகவதி ஆகியோரின் மூத்த புதல்வரும், ரவிராஜ் (ஜேர்மன்), மதிவதனி (பிரான்ஸ்), விஜயதர்சினி (சனசரட்ணம் ம. வி. இலிகிதர்), மாணிக்கராணி (கௌசி), மேகலா, கோமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகாந்தன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற மார்க்கண்டு கனகம்மா, அனுசுயா பழனிச்சாமி விஜயலக்சுமி சபாரட்ணம் ஆகியோரின் பெறாமகனும், குமாரசாமி, தையலம்மா, காலஞ்சென்ற குகதாசன் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று 25-04-93 [ஞாயிறு] அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காகபூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. நல்லையா
(தகப்பன்)

இல 39, மூத்தவிநாயகர் வீதி.
நல்லூர்.
(25394)

## செல்லப்பா பேரம்பலம்

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லப்பா பேரம்பலம் அவர்கள் 15-04-93 அன்று புங்குடுதீவில் இறையடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா நாகமுத்து தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற தம்பு - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மா தங்கமுத்து ஆகியோரின் அன்புத் துணைவரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, ஏகாம்பரம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, பரமேஸ்வரி, இரஞ்சிதமலர், சோமசுந்தரம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தில்லையம்பலம், காலஞ்சென்ற குமாரசாமி, சிவசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்த விசுவலிங்கம், ஐயம்பிள்ளை, மீனாட்சி (மலேசியா) இராமச்சந்திரன், கோபால் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். கீழ் குறிப்பிட்ட விலாசத்தில் நாளை துக்கம் அனுட்டிக்கப்படும்.

தகவல்:
ஏகாம்பரம்
(மகன்)

30, கண்ணபுரம்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
(25396)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 361 இல் கத்திலுள்ள அச்சகத்தில் 25 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இன்று

மகளிர் அபிவிருத்தி நிலையம் ''கிராமிய தலைமையில் பெண்கள் பங்கு'' என்ற தலைப்பில் ஓர் கருத்தரங்கை இன்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் தெற்கில் உள்ள சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடத்தவுள்ளது. (க)

o o o

யாழ்ப்பாணம் நாவலர் வீதி புதிய கல்வி நிலையத்தின் 1993 பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நராலியடி நாவலர் மண்டபத்தில் நடைபெறும் (க)

o o o

யாழ். வட்ட லியோ கழகத்தினர் வரியில் உள்ள பரமானந்த ஆசிரமத்துக்கு தையல் இயந்திரம் ஒன்றையும், விளையாட்டு உபகரணங்களையும் இன்று வழங்க உள்ளனர். இந்த வைபவத்தில் யாழ் லயன்ஸ் கழகத்தினரும் கலந்து கொள்வர். (இ)

o o o

பண்ணாகம் சத்சங்க வட்ட பத்தாவது ஆண்டுவிழா இன்று ஞாயிறு மாலை பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் ஆலய மண்டபத்தில் நடைபெறும் (இ-28)

o o o

கொடிகாமம் தெங்குப்பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளாம் போக்கட்டி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

o o o

மேதினஊர்வலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி ஆராய்வதற்கான பாடசாலை அதிபர்களின் அவசர கூட்டம் ஒன்று இன்று காலை 10 00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ-30)

## நாளை

தொலைக்கல்வி - சிரேஷ்ட போதனாசிரியர் கூட்டம் நாளை திங்கட்கிழமை யாழ். கல்வித் திணைக்களத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

இதில் மே மாதம் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் நடைபெற விருக்கும் முதலாம் ஆண்டு இறுதிப் பரீட்சை பற்றிய விவரங்கள் அறிவிக்கப்படும். (இ)

o o o

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சுய வேலை வாய்ப்பு உதவித் திட்டத்தின் கீழ் 6 மாத கால தையல் பயிற்சி பெற்ற 44 இளம் யுவதிகள் ஒழுங்கு செய்த கண்காட்சி ஒன்று, நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வரணி சைவப் பிரகாச வித்தியா சாலையில் நடைபெறும். அதேவேளை, அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். (க)

## ஒலிவர் தம்பு காலமானார்

லண்டன், ஏப். 25

தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்பு நேற்று ஜோகன்னஸ் பேர்க்கில் காலமானார். அவருக்கு 75 வயது.

டாக்டர் நெல்சன் மண்டேலவின் நெருங்கிய நண்பராகிய தம்பு, நாட்டுக்கு வெளியே இருந்து 30 ஆண்டுகளாக தென் ஆபிரிக்க காங்கிரஸுக்குத் தலைமை வகித்தார். (க)

## இந்தியவிமான ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்ட அந்த விமானம் பத்தாம்கோட் பகுதியின் மேல் பறந்து கொண்டிருந்த சமயம் திசைதிருப்பப்பட்டது.

அமிர்தசரஸ் விமான நிலையத்தில் வலுக்கட்டாயமாகத் தரையிறக்கப்படுவதற்கு முன்னர் அந்த விமானம் லாகூர் விமான நிலையத்தின் மேல் சிறிது நேரம் வட்டமிட்டதாகவும் —

பாகிஸ்தான் அதிகாரிகள் அந்த விமானத்தை லாகூரில் இறங்குவதற்கு அனுமதி வழங்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜம்மு - காஷ்மீர் தீவிரவாத குழு ஒன்றைச் சேர்ந்த ஒரு வராலேயே அந்த விமானம் கடத்திச் செல்லப் பட்டிருக் [illegible] ஜைன்ஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## செயலகப் பகுதியிலிருந்தே மேதின பேரணி புறப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 25

முன்னர் அறிவிக்கப்பட்ட மே தினப் பேரணி சம்பந்தமான ஏற்பாட்டில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் மே தினப் பேரணி இம்முறை யாழ். செயலக முன்றலில் இருந்து ஆரம்பமாகி யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட விளையாட்டு மைதானத்தில் நிறைவுறும்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு இமையவன் மேற்கண்டவிவரத்தைத் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் வங்கிகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ-162)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி தனலட்சுமி தம்பியப்பா

கொக்குவில் மேற்கு ''சிவ பவன'' த்தில் வசித்தவரும், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை இளைப்பாறிய ஆசிரியையும் ஆகிய செல்வி தனலட்சுமி தம்பியப்பா 24-04-1993 (நேற்று) காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கு. ஸ்ரீரங்கநாதன்
(பெறாமகன்)

கொக்குவில் மேற்கு. (25398)

## சண்முகம் கந்தப்பிள்ளை

மலாயன் பென்சனியரும், விஷக்கடி வைத்திய நிபுணருமாகிய சண்முகம் கந்தப்பிள்ளை 22-3-93 இல் புங்குடுதீவில் காலமானார். இவர் காலஞ்சென்ற சண்முகம் சிவகாமிப்பிள்ளையின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், நாகரத்தினம் (முன்னாள் C T. B Officer மிருசுவில்), விசாகரத்தினம் (Security Officer University Of Jaffna ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற மனேச்சர் குழந்தைவேலு, காலஞ்சென்ற Dr. சரவணமுத்து, செந்தில்நாதன், காமாட்சி, அமிர்தம், இராசம்மா, காலஞ்சென்ற சேதுநாதன் (Chief Clerk) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தையா (Principal), காலஞ்சென்ற பொன்னம்மா, தங்கம்மா, ஆகியோரின் அன்பு மைத்துனரும், நீ வ. முருகேசுவின் அன்புச் சகலனும், விக்னேஸ்வரன், மயூரன், குணாளன், விநோதினி, நிசாந்தினி, ஜனாளன், அனுஷன், வாகீசன் ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார். இவரது பிரிவை முன்னிட்டு பழனியாண்டவர் கோவிலடி இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் மகன் விசாகரத்தினம் இல்லத்தில் இன்று 25-4-1993 ஞாயிற்றுக்கிழமை துக்கம் கொண்டாடப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. நாகரத்தினம்
க. விசாகரத்தினம்
(மக்கள்)

(25387)

## C. S. கந்தையா (கிளாக்கர்)

நாரந்தனைகிழக்கு, ஊர்காவற்துறை)

ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நாரந்தனை கிழக்கு ஊர்காவற்துறையை வசிப்பிடமாகக் கொண்டவருமான, C S; கந்தையா (முன்னாள் நீதிமன்ற லிகிதர், வவுனியா), 04-04 93 அன்று மட்டக்களப்பில் காலமானார். அன்னார் லட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், இந்திராணி (முன்னாள் ஆசிரியை ஆனைப்பந்தி மெ. மி. பாடசாலை), (கனடா) சிவயோகநாதன் (ஆசிரியர் கலாசாலை, விநிதி, மேற்பார்வையாளர், மட்டக்களப்பு), யோகாம்பிகை (கனடா), சிவகுமாரன் (எழுதுவினைஞர் கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு), யோகேஸ்வரி சிவசுப்பிரமணியம், ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மநாதன் (கனடா), துளசிகாமணி (கனடா), வனிதா (ஆசிரியர் கலாசாலை மட்டக்களப்பு), பத்மாவதி (ஆசிரியை மட்டக்களப்பு), யோகதாஸ் (எழுதுவினைஞர் கல்வித்திணைக்களம், வவுனியா), ஜெயா ஆகியோரின் மாமனாருமாவார்

அன்னாரின் ஈமக்கிரியை 04-04-93 அன்று மட்டக்களப்பில் நடைபெற்றது, இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. குகதாஸ்

10/14 சிவன் கோவில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
[25395]

## OBITUARY

### MR. GABRIELPILLAI STEPHAN MANUELPILLAI

Beloved husband of Anne Jeyawathy Loving father of Ranjithan, Swinitha, Noeline, Bernard, Finton, Carmaline, and Julian, Father in law of Maheswary, Arulraj, Emmanuel, Malar and Rajmohan

Will be removed for interment at St. Mary's Burial Grounds, Jaffna on Sunday, 25th April 1993 Cortege leaving residence. 253/2, Hospital Road, Jaffna at 9 00 a m

253/2, Hospital Road,
Jaffna.
(25390)

மேலும் மரண அறிவித்தல் 2 ஆம்பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org